செ.வெ. எண்: 033 நாள்: 13.01.2017

**மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலங்கள் மற்றும் தகவல்கள் குறித்த புதிய (Mobile App) கைபேசி பயன்பாட்டு பதிவிறக்கத்தினை துவக்கி வைத்தார்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலங்கள் மற்றும் தகவல்களை அறிய கைபேசியில் (Mobile App-Pinakin) ‘‘பினாக்கின்’’ என்ற பதிவிறக்கத்தினை , இன்று (13–01–2017) தமிழ்நாடு சுற்றுலாத் துறை தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு சுற்றுலாத் துறை திரு. வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஹர் சஹாய் மீனா,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் துவக்கி வைத்தார்

பின்னர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டிற்கு உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை புரிகின்றனர். அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலாத்துறை புராதன சுற்றுலாத் தலங்களான தஞ்சை பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், மாமல்லபுரம் ஆகிய இடங்களின் தகவல்களை ஒலிவசதியுடன் கூடிய கைப்பேசி செயலி மூலம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில்

எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய வசதியை “பினாகின்’’ என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் சுற்றுலாத்துறை இணைந்து இவ்வசதியை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகப்படுத்துகிறது. இத்தகவல்களை சுற்றுலாப் பயணிகள் இலவசமாக தங்களது கைப்பேசி மூலம் பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம். இதே போன்ற வசதியினை மற்ற முக்கிய சுற்றுலா தலங்களுக்கும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை படிப்படியாக செய்யப்பட உள்ளது. இவ்வசதியினை குறித்த கருத்துக்களை சுற்றுலாப்பயணிகள் கீழ்கண்ட மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம்

ttdc.chennai@gamil.com

**<u>தமிழ்நாடு சுற்றுலாச் சந்தை:</u>**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் யாவும் சிறந்த முறையில் பராமரித்து வருவதால் இந்தியாவிலேயே தமிழ்நாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துறைக்கப்படுகிறது. மேலும் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளில் வசதிக்காகவும் அவர்களுக்கு பயனளிக்கும் வகையிலும் தமிழ்நாடு சுற்றுலா சந்தை கடந்த 23 டிசம்பர் திங்கள் 2016ல் நடத்துவதற்கு செயல்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், IATO கூட்டம் சென்னையில் நடத்தயிருந்ததால் தமிழ்நாடு சுற்றுலாச்சந்தை நடத்த தாமதமானது.

தற்போது, இச்சுற்றுலாச் சந்தை வருகின்ற 20.5.2017 முதல் 22.5.2017 தேதிகளில் சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்சுற்றலாச்சந்தையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலா

தொடர்பான பிரமுகர்களும் அரசு சார்ந்த கலை மற்றும் பண்பாடு, கைத்தறி மற்றும் கைவிணை பொருட்கள் போன்ற நிறுவனங்கள் பங்குபெற இருக்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் பிரதிநிதித்துவ அமைப்பாக இருந்த அனைவரையும் ஒருகிணைந்து எல்லா வசதிகளையும் செய்து தரக்கூடிய நிறுவனமாக செயல்படும்.

இந்திய மற்றும் வெளிநாடுகளில் உள்ள சுற்றுலா சார்ந்து பிரமுகர்கள், மற்ற மாநிலங்கள், Union Territory, எல்லா விமான சேவை நிறுவனங்கள், சுற்றுலா பிரமுகர்கள், ஓட்டல் சேவைபுரியும் சங்கங்கள், சுற்றுலா சார்ந்த இதர சங்கங்கள், IATO, IHHA, IHA and Travel Media ஆகியவற்றை ஒருங்கிணைந்து சுற்றுலாத்துறை செயல்படும். தமிழ்நாடு சுற்றுலாச் சந்தை–2017ல் பங்குகொள்ள விருப்பம் தெரிவிப்பவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கையும் மற்றும் அதன் செயல்வடிவ திட்டங்களையும் பொங்கல் பண்டிகை பின்பு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக பொதுமேலாளர் செல்வி.கவிதா ராமு மற்றும் “பினாக்கின்’’ நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு.ஸ்ரீகாந்த் ஐயர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**